# பெறுகை அறிவித்தல்

## அரசாங்க அச்சுத் திணைக்களம்

என்.46

## ஒப்பந்த இலக்கம் – DGP/05/01/Bar Soap/2024 - II

# பார்சோப் கொள்வனவு செய்தல்

கொழும்பு 08, டொக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்த, இல. 118 இல் அமைந்துள்ள அரசாங்க அச்சுத் திணைக்கள ஊழியர்களுக்கு பார்சோப் கொள்வனவு செய்வதற்கு, தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யும் அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்து மாத்திரம் 05 மாத காலத்திற்கு தேசிய போட்டி கேள்வி கோரலின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன.

1. கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்காக அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் அரசாங்க அழுத்தகரின் பெயரில் எழுத்து மூல வேண்டுதலை மேற்கொள்ளல் வேண்டும். மேற்படி வேண்டுதலின் பின்னர் மீளளிக்கப்படாத ரூ.2000.00 தொகையை அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் காசாளரிடம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்த பின்னர் 2024.04.24 முதல் 2024.05.14 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப. 3.00 வரை கீழ்க்காணும் முகவரியில் அமைந்துள்ள அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் ஏனைய வழங்கல் பிரிவிலிருந்து கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ள முடிவதுடன் இக் கேள்வி ஆவணக் கட்டணத்தை கட்டணம் செலுத்தாமலேயே பரீட்சித்துப் பார்க்கலாம்.
2. கேள்விதாரர் தமது கேள்வியுடன், இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்த வர்த்தக வங்கியிலிருந்து, அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் "அரசாங்க அழுத்தகர்" பெயரில் ரூ. 40,000.00 கேள்விப் பிணையொன்றை/ வங்கிப் பிணையொன்றை அல்லது அதன் பெறுமதி, அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் கணக்குப் பிரிவின் காசாளர் கருமபீடத்திற்கு செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.
3. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்கள் அடங்கிய விண்ணப்பங்களை, உறையொன்றில் இட்டு, 2024.05.15ம் திகதி பி.ப. 2.00 இற்கு முன்பு கிடைக்குமாறு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது திணைக்களத்தின் ஏனைய வழங்கல்கள் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். உங்களது கேள்வி சமர்ப்பிக்கும் உறையின் இடது பக்க மேல் மூலையில் "அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் பார்சோப் கொள்வனவு செய்வதற்கான கேள்வி 2024" என்று குறிப்பிடுதல் வேண்டும். 2024.05.15 பி.ப. 2.00 இற்கு கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைவதுடன், உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். இவ் வேளையில் உங்களுக்கு அல்லது உங்களது பிரதிநிதி ஒருவருக்கு சமுகமளிக்கலாம்.
4. மேலதிக விபரங்களை, வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 8.30 முதல் பி.ப. 3.30 வரை கீழ்க்காணும் முகவரி குறிப்பிடப்படும் அலுவலகத்தின் ஏனைய வழங்கல்கள் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**அரசாங்க அச்சுத் திணைக்களம்,**
**இல. 118, டொக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்த, கொழும்பு - 08**
**2024.04.24**

**தொலைபேசி : 011 2673311/ பெக்ஸ் : 0112698653**
**இணையதளம் : www.documents.gov.lk**
**மின்னஞ்சல் : othersupplydgp@gmail.com**